ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!

12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு
<u>சித்தர் அரசயோகிக் கருவூரூர் அவர்கள் அருளியது</u>

# <u>ஆவி, ஆன்மா, ஆருயிர் விளக்கம்</u>



இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்.
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் சமாது கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,119 **தை** மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

<u>வெளியிடுவது:</u> அனாதி சங்கராச்சாரியார் பீடம்.

காணிக்கை: ரூ 10/-

# **உள்ளுறை**

**1. ஆவி, ஆன்மா, ஆருயிர் விளக்கம் - அறிவிக்கை.**

**2. அருளுலக அறிவிப்பு - அருவுருவ மூகாம்பிகை ஆலயம் - அறிவிக்கை.**

**3. தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்கள் அருளிய குருபாரம்பரிய வாசக வரிகளில் சில...**

## **இந்து வேத தேவ விளக்கச் சிந்தனைகளில் சில...**

இந்து மதக் கடவுள்களில் ஆண்கள், பெண்கள், அலிகள் என்று மூவகையினரும் உண்டு.

இந்து மதக் கடவுள்களில் அருவங்கள், அருவுருவங்கள், உருவ அருவங்கள், உருவங்கள் என்று நான்கு வகையினரும் உண்டு.

இந்து மதக் கடவுள்கள் ஊழ்வினை, ஆள்வினை, சூழ்வினை, விதி, ...... முதலிய பாதிப்புக்களை அகற்றிப் பாதுகாப்புத் தருகின்றார்கள்.

இந்து மதக் கடவுள்கள் ‘குடும்ப ஆண்டவர்களாக’, ‘குல தெய்வங்களாக’, ‘கிராம தேவர் தேவதைகளாக’, ‘நாட்டுக் கடவுள்களாக’ ...... பல நிலைகளில் வாழ்ந்து உதவுகின்றார்கள்.

இந்து மதக் கடவுள்கள் முற்பிறப்பு, மறுபிறப்பு, இப்பிறப்பு எனும் மூன்றையும் விளக்குகின்றார்கள்.

# ஆவி, ஆன்மா, ஆருயிர் விளக்கம்

## பதினெண்சித்தர்கள் வழங்கிய மெய்யான இந்துமதம்

### இந்து மறுமலர்ச்சி இயக்கம் (இ.ம.இ.)

தோற்றம் கி.பி. 1772.

### INDU MARUMALARCHI IYAKKAM (I.M.I)

Founded: 1772 A.D.

## அறிமுகவுரை

**தலைவர், குருதேவர், இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், குவலய குருபீடம், குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி.**

1. உலகம் தழுவி மதமறுப்பும், வெறுப்பும், எதிர்ப்பும், பழிப்பும், அழிப்பும், நாத்திகமும் ..... வளர்ந்து வரும் இந்த இருபதாம் நூற்றாண்டில் மதமறுமலர்ச்சிக்காகப் பணியாற்றப் புறப்பட்டிருக்கும் மாவீரரின் தத்துவங்களையும், செயல் சித்தாந்தங்களையும் அவர் பிறந்த மண்ணுக்குரியவர்களாவது புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் கருத்தோட்டத்தில்தான் இந்த அறிமுகவுரை வழங்கப்படுகிறது.

2. இவருடைய படைப்புக்கள் அனைத்தும் மனித இனம் என்றென்றும் போற்றிப் பேணிப் பயன்படுத்திட வேண்டிய

ஒப்புயர்வற்ற அரிய பெரிய கருவூலங்களாகும். இவர் வழங்குகின்ற கருத்துக்கள் மனித குலம் அனைத்துக்கும் தன்னம்பிக்கையையும், சுயமரியாதையையும், புதுமையை விளைவிக்கும் உந்து சத்தியையும், புரட்சிச் சாதனைகளைச் செய்து முடிக்கும் சிந்தனைத் திறனையும், செயலாற்றலையும் வற்றுது வழங்கக் கூடியவையே ஆகும். இம்மண்ணுலகைப் புதுப்பிப்பதற்கான போராட்டத்திற்கு இளைஞர் சமுதாயத்தை அறைகூவி அழைக்கும் முயற்சிகளாகவே இருக்கின்றன இவரின் பணிகள்.

3. இவருடைய எழுத்துக் குவியல்கள் அறிவுலகின் மூலாதாரச் சிறப்புக்களை வெளிப்படுத்துவனவாகவே அமைகின்றன. இவர் வழங்கும் செய்திகள் இம்மண்ணுலகில் உள்ள அனைத்து விதமான துறைகளிலும் உள்ள அனைத்து விதமான பிறச்சினைகளையும் புரிந்து தீர்வு காண உதவக் கூடியனவாக உள்ளன. அருளுலகின் பேராலோ, பொருளுலகின் பேராலோ பூட்டப்பட்டுக் கிடக்கின்ற பூட்டுக்கள் அனைத்தையும் திறக்கின்ற திறவுகோல்களாகவே இவருடைய சாதனைகளும், போதனைகளும் அமைந்திருக்கின்றன.

4. இவருடைய தத்துவம் மனித இனம் முழுமையும் பயனடையக் கூடிய புரட்சிகரமான புதுமை நிறைந்த ஒன்றுகும். இந்த இருபதாம் நூற்றுண்டில் மிகப்பெரிய வளர்ச்சியைப் பெற்று வரும் ‘<u>மகேசுவரயியம்</u>’ (*மார்க்சியம்*) உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தைப் புதிய கட்டமைப்புக்களைப் பெறுமாறு செய்யும் ஒரு மாபெரும் திட்டமாகும். நாத்திகத்திற்கு வித்தூன்றிய மார்க்சியத்திற்கும் புதிய புதிய புரட்சிமிகு சித்தாந்த விளக்கங்களை வழங்கும் நவீன விஞ்ஞானமே இவருடைய ஆன்மிக வாதம்.

5. உலகெங்கும் மதமாற்றங்களும், மதவெறிகளும், மதப்போர்களும் வளர்ந்து வரும் இந்த நூற்றுண்டில் அனைத்திற்கும் தீர்வு காணுகின்ற பகுத்தறிவு விஞ்ஞானமான <u>சித்தரியத்தை</u> (Siddharism) ஒரு படைப்பாற்றல் மிக்க அரசியல் சித்தாந்தமாகவும், சமூக விஞ்ஞானமாகவும் அறிமுகப்படுத்தும் சிந்தனைச் சிற்பியாக விளங்குபவரே இவர். இவருடைய செயல்நிலைகளை உடனிருந்து காணுபவர்களும், வெளியிலிருந்து கேட்பவர்களும் இவரை ஓர் இதிகாசமாகவோ வீரகாவியமாகவோதான் எண்ண நேரிடும்.

அதாவது மக்களிடம் உள்ள அறியாமைக்கும், மடமைக்கும், மூடப்பண்புகளுக்கும், கண்மூடிப் பழக்கவழக்கங்களுக்கும், முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையான குருட்டுக் கொள்கைகளுக்கும், இருட்டுப் போக்குகளுக்கும், அடிமையுணர்விற்கும், போலியுணர்விற்கும், கூலியுணர்விற்கும், காலியுணர்விற்கும், கோழையுணர்விற்கும் ..... முடிவுகட்டக் கூடிய அருட்பெருஞ்சோதியாக!, அருளாற்றல் மிக்க சத்தியாக!, புரட்சிச் சித்தாந்தமாக!, உறுதிமிக்கப் பகுத்தறிவு வாதமாக!, மக்கள் திரளின் மெய்யுணர்வாக!, புதுமை நாட்டத்தின் நம்பிக்கையூற்றாக!, கட்டுப்பாடும் ஒழுங்கும் மிக்க நிறுவன நிர்வாகங்களை உருவாக்கும் நாயகமாக! விளங்குபவரே இவர்.

6. அனைத்து வகையான அடியான்களும், அடியாள்களும், அடியார்களும், ஆர்வலர்களும், விருப்பாளர்களும், நம்பிக்கையாளர்களும், ஏந்தாளர்களும் தங்களுக்குள் வாழும் ஒரு மாபெரும் சத்தியாக உணரும், உணரப்படும் <u>தத்துவ நாயகரே</u> இவர். அதாவது **'தமக்குள் அனைவரும்'**, **'அனைவருக்குள்ளும் தாம்'** என்ற சித்தர்நெறியின் விளக்கமாக வாழுபவரே இவர். இவரால்தான் இந்த இருபதாம் நூற்றுண்டில் அடிப்படைத் தேவைகளை முழுமையாக நிறைவு செய்ய முடியும்

என்பதுதான் வரலாற்றுப் பேருண்மையாக இருக்கிறது. அதாவது உலகந்தழுவி இன்றுள்ள கவலைக்குரிய, தொல்லைகள் மிகுந்த, பிறச்சினைகள் ஊற்றெடுக்கின்ற நிலைமையில்; முற்போக்கினையும் புதுமையினையும் உடைய புரட்சிகரமான மாற்றங்களை விரும்பும் ஒரு மனிதகுலச் சித்தாந்தமாகவே வாழுகிறார் இவர். அதாவது எல்லா நாட்டுச் சத்திகளையும், சமூக முற்போக்கு ஆசைகளையும் அரவணைத்துச் செல்லும் ஒரு தத்துவமாகவே சித்தர் நெறி எனும் இந்துமதம் இருக்கிறது. இப்பேருண்மையைச் சுட்டிக்காட்டி சித்தர்நெறியின் படைப்பாற்றலை வலியுறுத்திச் செயலாக்கும் மாபெரும் செயல்வீரர்தான் இவர்.

7. சித்தர் நெறியெனும் இந்துமதம் ஒரு வறட்டு வேதாந்தமும் அல்ல; முரட்டுச் சித்தாந்தமும் அல்ல; குருட்டுச் சூத்திரமும் அல்ல. தனிமனித வாழ்வுக்கும், குடும்ப வாழ்வுக்கும், சமுதாய வாழ்வுக்கும், மக்களின் நல்வாழ்வைக் கருதும் அரசு (The Welfare State) அமைவதற்கும் வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக, வழியாக இருப்பதுதான் சித்தர் நெறியெனும் இந்துமதம்.

இதை நேரடியாகச் சொல்ல வேண்டுமென்றால்; உலகச் சமாதானத்திற்கும், சமத்துவத்திற்கும், பொதுவுடமைக்கும், நல்ல கூட்டுறவுக்கும், ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்கும் தேவையான ஒரு மாபெரும் பண்பாட்டுப் புரட்சியை (The Cultural Revolution), அனைவருக்கும் பயன்படக் கூடிய ஒரு முழுமைப் புரட்சியாக (A Total Revolution) விளைவித்துத் தரக்கூடிய ஒரு சமூக விஞ்ஞானமே இந்தச் சித்தர் நெறியெனும் இந்துமதம். இந்த விஞ்ஞானத்தை எல்லாத் திசைகளிலும், எல்லாத் துறைகளிலும் வளர்த்துச் செல்ல வேண்டியது அவசியமாகும்.

**இன்றைய சமய, சமுதாய, அரசியல் துறைகளிலுள்ள குருடர்களும், திருடர்களும், புரட்டர்களும், திருத்தல்வாதிகளும் பொதுவாக மதத் துறையையே மறுப்பிற்கும், வெறுப்பிற்கும், எதிர்ப்பிற்கும், நகைப்பிற்கும், பகைப்பிற்கும் உரியதாக்கி விட்டார்கள். இவைகளை முறியடிக்கும் ஆற்றலுடைய ஒரே ஒரு நெறி சித்தர் நெறியெனும் இந்துமதம்தான்.**

8. சித்தர் நெறியின் பொதுவான கருத்துக்கள் எல்லா நாடுகளிலும் செயல்படுத்தப்படக் கூடிய தரமும் திறமும் உடையவையேயாகும். அதாவது சித்தர் நெறியெனும் இந்துமதம்தான் புதுமையை விளைவிக்கும் புரட்சிகர நடைமுறைக்கான ஒரு விஞ்ஞான செயல்வடிவத்தை வழங்குகின்றது. இதனைத் தெளிவாகக் கூற வேண்டுமென்றால் புதுமை நாட்டமும், புரட்சித் திட்டமும் உடைய தத்துவம் இல்லாமல் ஒரு நாட்டில் புத்துணர்ச்சியைத் தோற்றுவிக்க முடியாது என்ற கருத்தைப் புரிந்துதான் செயல்படுகிறார் இந்துமதத் தந்தை ஆகிய எங்களது குருதேவர்.

9. இந்த ஆவி, ஆன்மா, ஆருயிர் விளக்கக் கட்டுரை எங்களது குருதேவரின் கொள்கைத் தத்துவமும், செயல்சித்தாந்தமும் மெய்யானவை, உய்வுக்குரியவை, வாய்மைநிறை பயனுக்குரியவை என்பதையே விளக்குகின்றன. எனவே எங்களையும், எங்களது தலைவரையும் புரிந்து விரும்பி எங்களது இயக்கத்தில் சேர வாருங்கள் என்ற அழைப்பு விடுத்து இந்த அறிமுகவுரையை நிறைவு செய்கிறோம் யாம்.

**இ.ம.இ. தலைமைப் பொறுப்பாளர்**

**அருள்மிகு அங்காளப் பரமேசுவரி சன்னிதானம்**

**பிறமாச்சாரியார்.**

# <u>அருட்பணி விரிவாக்கத் திட்டம்</u>

பொருளுலக அறியாமைகளாலும், புரியாமைகளாலும், பேராசைகளாலும், தன்னலங்களாலும், ..... மனித வாழ்வு நோய் நிலைகளையும், பேய் நிலைகளையும் பெற்றுவிட்டது. ஒரு சில மதத் தலைவர்களால் மதங்களுக்கிடையே போட்டியும், பொறுமையும் அதிகரித்து ஓயாத சண்டை சச்சரவுகளும், போர்களும் விளைந்து விட்டன. இவற்றால் மதத்தின் தூய்மையான போக்கும், உயரிய குறிக்கோளும் வீணாகி விட்டன. இதன் பயனாக, மதத்தையே மறுக்கவும், வெறுக்கவும், எதிர்க்கவும், ஒதுக்கவும், புறக்கணிக்கவும், ..... முற்படுபவர்கள் எண்ணிக்கையில் அதிகமாகிட ஆரம்பித்து விட்டார்கள். எனவேதான் மதத்தின் மெய்யான வரலாறும், தத்துவ விளக்கமும், சித்தாந்த நடைமுறையும் மீண்டும் வழங்கப்படும் முயற்சி **அருட்பணி விரிவாக்கத் திட்டமாக** (**அ.வி.தி.**) மலர்ந்துள்ளது. இது வளர்வதற்காக இந்த ஆவி, ஆன்மா, ஆருயிர் விளக்கம் வெளியிடப்படுகிறது.

இன்று பல மதங்கள் ஏட்டளவிலும், சில மதங்கள் நாட்டளவிலும் வாழுகின்றன. இவைகள் காலப்போக்கில் தோன்றிய அருளாளர்களால் உருவாக்கப்பட்டவையே. அதாவது, மனிதர்கள் தன்னம்பிக்கையோடும், அன்போடும், பற்றோடும், பாசத்தோடும், உண்மையான வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காக அந்தந்த காலக்கட்டங்களில் தோன்றிய அருளாளர்கள் தங்கள் தங்களின் வட்டாரச் சூழல்களுக்கு ஏற்பத் தோற்றுவித்தவைகள்தான் இன்றுள்ள மதங்கள். ஆனால், <u>இன்றைக்கு மதத்தின் பேரால் கோழை நிலையும், ஏழை நிலையும், அடிமை நிலையும், சுரண்டல் வாய்ப்பும், சர்வாதிகாரப் போக்கும், பிரிவினையும்,</u>

ஏற்றத்தாழ்வும், தீண்டாமையும், பகைமையும் வளர்க்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் அகற்றுவதற்காகத்தான் அ.வி.தி. அமைப்பும், பணியும் துவக்கப்பட்டுள்ளன.

இம்மண்ணுலகில் மதம் ஏன் தோன்றிற்று? எப்பொழுது தோன்றிற்று? யாரால் தோற்றுவிக்கப்பட்டது? எப்படி வளர்ச்சி பெற்றது? என்ற விஞக்களுக்குத் தெளிவான விடை காணுவதன் மூலம்தான் மதத்தின் தேவையையும், பயனையும் முழுமையாக அடைய முடியும்.

இந்த அண்டப் பெருவெளியில் எண்ணற்ற அண்டங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றுள் பயிரினங்களும், உயிரினங்களும் வாழுகின்ற இயற்கை வளமும், வசதிகளும் நிறைந்த அண்டங்கள் எண்ணிக்கைக்கு உட்பட்டவையே. அதாவது, திருப்பதி அண்டங்கள் 108 + சத்தி அண்டங்கள் 243 + சிவாலய அண்டங்கள் 1008 = 1359. இவை தவிர பயிரினங்களும், உயிரினங்களும் தோன்றிக் கொண்டிருக்கின்ற அண்டங்கள் என்று பல அண்டங்களும்; பயிரினங்களும், உயிரினங்களும் அழிந்து கொண்டிருக்கின்ற அண்டங்கள் என்று பல அண்டங்களும் நிறைய இருக்கின்றன. இவை பற்றிய ஆய்வுகளையும், அறிவியல்களையும், ஆட்சிகளையும் தங்களுடைய பொறுப்பில் வைத்திருப்பவர்கள்தான் பதினெண்சித்தர்கள். இவர்களுடைய தாய்மொழியே அண்டபேரண்டமாளும் அமுதத் தமிழ்மொழி.

இந்தப் பதினெண்சித்தர்கள் புதிதாகப் பயிரினங்களும், உயிரினங்களும் தோன்றுகின்ற அண்டங்களுக்கெல்லாம் சென்று பண்பட்ட உயிரினங்களை உருவாக்கியும், உயிரினங்களின் தலைமையாக மனித இனத்தைத் தோற்றுவித்தும் (பக்குவப்படுத்தியும்) செயல்பட்டு வருகிறார்கள். இவர்களுடைய முயற்சிகளின் வரலாறும், தத்துவமும்,

செயல்விளக்கமும்தான் இந்துமதம் எனப்படும். இந்த இந்து மதத்தின் எல்லாவிதச் செயல்நிலைகளும் **அருளூறும் தெய்வீகத் தமிழில்தான்** படைக்கப்படுகின்றன.

எனவேதான் **மனிதன் அண்டபேரண்டங்களையோ, பயிரின உயிரினங்களையோ, பழம்பிறப்புக்களையோ, மறுபிறப்புக்களையோ புரிய வேண்டுமென்றால் தமிழ்மொழியின் வழியாகத்தான் விரைவாகவும், விரிவாகவும், சிறப்பாகவும் தெரிந்து கொள்ள முடியும்**. இருந்த போதிலும், பதினெண்சித்தர்கள்தான் உலகில் உள்ள அனைத்து மொழிகளையும் தமிழ்மொழியை அடிப்படையாகக் கொண்டுதான் தோற்றுவித்தார்கள் என்பதால்; எல்லா மொழிகளுமே பூசைமொழியாகப் பயன்படும் தகுதியுடையவைதான் என்ற கருத்தை வலியுறுத்துகிறார்கள் பதினெண்சித்தர்கள். அதாவது எல்லா மொழியினருமே தங்களுடைய தாய்மொழியின் வாயிலாகப் பத்தி நிலைகளையும், சத்தி நிலைகளையும், சித்தி நிலைகளையும், முத்தி நிலைகளையும் பெறலாம்.

எனவே, இன்றைக்கு உலக மத வாதிகளுக்கும் அறிவியல் வாதிகளுக்கும் புரியாதவைகளாக இருக்கின்ற **ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றின்** வடிவமைப்புக்களும், வாழ்வியல்களும், பண்பியல்களும், செயல்நிலைகளும், தமிழ் மொழியில் முழுமையாக இலக்கிய வடிவில் விளக்கப்படுகின்றன. இதுவே, பதினெண் சித்தர்களின் இந்து மதத்தின் சிறப்பு.

# இந்து மதம்

இம்மண்ணுலகில் முதல் முதல் தோன்றிய நிலமான இளமுறியாக் கண்டம் (இளமை மாறுத நிலம் = முதிர்ச்சியடையாத, முதிர்ச்சி பெற்று உறுதி பெறுத சதுப்பு நிலேங்களே மிகுதியாக உடைய கண்டம்) எனப்படும் குமரிக் கண்டத்தில்தான் முதன்முதலாக உயிரினங்களும் பயிரினங்களும் தோன்றின. அதாவது முதல் மனித இனம் (The First Mankind) தோன்றியது இந்தக் குமரிக் கண்டத்தில்தான். இந்தக் குமரிக் கண்டத்திற்குத்தான் பயிரினங்களும் உயிரினங்களும் தோன்றுவதற்கு முன்பிருந்தே அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும் தங்கள் தங்களின் ஆய்வுக் குழுக்களுடன் (The Astronauts and the Space Research Scientists) கணக்கற்ற முறை வந்து வந்து சென்றுர்கள். அவற்றின் பயனுகவே பயிரினங்களேயும் உயிரினங்களேயும் ஒழுங்குபடுத்திட்டார்கள்.

அப்பணியின் மிகவுயர்ந்த சாதனேயாகவே **மணீசர்கள்** எனப்படும் (மண் + ஈசர் = மண்ணின் தலேவர்) உயிரினங்களின் தலேவர்களேப் பதினெண்சித்தர்களின் **மானுட விஞ்ஞானமான இந்துமதத்**தின் மூலம் (The Induism is the Science of Man) பக்குவப்படுத்தி மனச்சாட்சியினேயுடைய மனிதர்களாக மாற்றினுர்கள். அதாவது, பதினெண்சித்தர்கள் தங்களுடைய அண்டபேரண்டமாளும் தத்துவமும் சித்தாந்தமும் முழுமையாக இணேந்த இந்துமதத்தின் மூலம் விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த மணீசர்களேப் பக்குவப்படுத்தி **தனிமனித வாழ்வு**, **குடும்ப வாழ்வு**, **சமூக வாழ்வு** என்ற முக்கோண வாழ்வியல் பீடத்தைப் பெறுமாறு செய்தார்கள்.

எனவேதான், <u>பதினெண்சித்தர்கள் அரசியல் எனும் துறையின் மூலம் மக்களைப் பண்படுத்த முடியாது</u>; <u>மதத்தின் மூலமே மனிதர்களைப் பண்படுத்த முடியும் என்று மிகத் தெளிவாகக் கூறுகின்றார்கள்</u>. இம்மாபெரும் வரலாறுதான் குருபாரம்பரியத்தில் <u>அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் நோக்கம், **"உலக சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்"** அமைப்பதும், **"உலக ஆன்மநேய ஒருமைப்பாடு"** உருவாக்குவதுமேயாகும்</u> என்று குறிக்கப்படுகிறது. இதற்காகத்தான் **ஆவி, ஆன்மா, ஆருயிர்** பற்றிய விளக்கங்கள் வழங்கப்படுவதன் மூலம் ஒவ்வொரு தனிமனிதனையும் பொதுநலமுடையவனாக, நீதியுடையவனாக, நேர்மையுடையவனாக, உண்மையுடையவனாக, அன்பும் இரக்கமும் உள்ளவனாக, தோழமையும் நட்பும் உடையவனாக, பற்றும் பாசமும் உடையவனாக, பிறர்க்கு உதவிச் சமாதானத்தோடு வாழும் மனிதனாக வாழச் செய்யும் முயற்சி துவக்கப்படுகிறது.

விண்வெளியிலிருந்து (வானம், ஆகாயம், விண் கடந்த பெருவெளி ..... முதலியவையும் அடங்கும்) பல குழுக்களாகத் தாத்தாக்களும், ஆத்தாக்களும், அம்மையப்பன்களும், கருப்புக்களும், 48 வகையான வழிபடுநிலையினர்களும் இம்மண்ணுலகுக்கு வந்தார்கள். இவர்களின் வருகையின் தொன்மை 'கல்தோன்றி மண்தோன்றாக் கால'த்திலிருந்து நடைபெறுகிறது. இவர்கள்தான் இன்றுள்ள <u>அனைத்து வகையான கலைகளுக்கும் அறிவியல்களுக்கும் தாயான மதத்</u>தை (The Religion is the Mother of the Arts and Sciences) மனிதர்களுக்கு வழங்கினார்கள்.

'மதம்' என்பதையே <u>**இந்து**</u> என்ற சொல்லால்தான் குறிக்கிறார்கள் பதினெண்சித்தர்கள். இன்றைய (1986ஆம் ஆண்டு) காலக்கட்டம் வரை மிகத் தெளிவாகக் கணக்கிட்டு பதினெண்சித்தர்கள் மனிதர்களை

உருவாக்கி, இந்து மதத்தை முழுமையாக வழங்கி, முதன்முதல் இளமுறியாக் கண்டத்தில் தென்இமய மலையின் பஃறுளியாற்றங் கரையில் முதல் இந்து மதப் பேரரசை உருவாக்கிய காலம் (1985ஆம் ஆண்டுக் கணக்கின்படி) 43,73,086 ஆண்டுகளுக்கு முன் என்ற கணக்கு தெளிவாக இருக்கின்றது. இதைத்தான் இந்து மதம் பிறந்த காலமாகக் குரு பாரம்பரியம், அரச பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், வாக்குகள், வாக்கியங்கள், வாசகங்கள், கரந்தங்கள், சுருதிகள், சூத்திறங்கள், சாத்திறங்கள், தோத்திறங்கள், மறைகள், வேதங்கள் ..... முதலியவை தெளிவாகக் கூறுகின்றன.

பதினெண்சித்தர்கள் ஆதியில் 43,73,086 ஆண்டுகளுக்கு முன்னுல் “**இந்து**” என்ற சொல்லுக்கு விந்து, உயிரணு, உயிரின்கரு, உயிரின் ஆரம்பமும் முடிவும், ஒளி, ஒலி, வலிமை, வளம், அழகு, இளமை, இனிமை, அன்பு, அமைதி, நிறைவு, நிம்மதி, ஒற்றுமை, உறவு, உரிமை, பற்று, பாசம், நேர்மை, வாய்மை, தூய்மை, மெய்ம்மை, துய்ப்பு, பத்தி, சத்தி, சித்தி, முத்தி, நிலைப்பேறு, பிறப்பிறப்பற்ற பெருநிலை, தவம், ஞானம், அருள் ..... என்று நாற்பத்தெட்டு வகையான பொருள் கூறினுர்கள். இது ஒவ்வொரு பதினெண்சித்தர் பீடாதிபதியின் காலத்திலும் தேவைக்கேற்பப் பல புதிய சொற்களால் விளக்கப்பட்டுப் பதினேராவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் காலத்தில் சிலநூறு சொற்களால் விளக்கம் பெறக் கூடிய ஓர் ஒப்புயர்வற்ற அரிய, பெரிய, உயரிய, பயன்மிக்க அருளுலகச் சொல்லாக ஆயிற்று. அதாவது, “இந்த **இந்து** என்ற தமிழ்ச் சொல்லைப் புரிந்து கொள்வதைப் பொறுத்துத்தான் இந்துமதப் போதனையும் சாதனையும் அமைந்திடும்” என்று குருபாரம்பரியமே குறிக்கின்ற அளவிற்கு மதத்துறையின் உயிராகவும், உள்ளீடாகவும், இயக்கச் சத்தியாகவும் இருப்பது இந்த **இந்து** என்ற தமிழ்ச் சொல்லேயாகும்.


எனவேதான், இளமுறியாக் கண்டம் மூன்று முறை கடலுக்குள் சிறுகச் சிறுகச் சிதைந்து அழிந்த பிறகு தோன்றிய பெரு நிலப்பரப்பிற்குப் பதினெண்சித்தர்கள் இந்தியா என்று பெயரிட்டார்கள். அத்துடன் கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டத்தில் இருந்த தென் இமயமலையையும், அங்குத் தோன்றிய பஃறுளி, குமரி, இந்து (சிந்து), கங்கை, யமுனை, பிறமண் ..... முதலிய ஆறுகளையும் நினைவு கூர்ந்து 'வடஇமயம்' என்று புதிதாகத் தோன்றிய பனிமலைக்கும் அதில் தோன்றிய ஆறுகளுக்கும் முறையே பெயரிட்டார்கள். இதைத்தான் "வடஇமயம் முதல் குமரி வரை ஒருமொழி (தமிழ் மொழி) வைத்து உலகாண்ட பாண்டியர், சோழர், சேரர் ....." என்ற வரலாற்று இலக்கியச் சொற்றொடர் குறிக்கின்றது.

அதாவது தமிழர்கள்தான் இந்தியாவின் பூர்வீகக் குடிகள் (The Tamils are the aboriginates of the India) என்ற பேருண்மையும்; இந்தியாவின் பண்பாடும், நாகரிகமும் பதினெண்சித்தர்கள் தோற்றுவித்த மெய்யான இந்துமதத்திற்கே உரியவை என்பதும்; இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளும் தமிழ்மொழியின் குழந்தைகளே என்றப் பேருண்மையும், உலக மதங்கள் அனைத்திற்கும் பிறப்பிடமாக, இருப்பிடமாக, கருவாக, குருவாக, தருவாக, திருவாக இருப்பது பதினெண்சித்தர்கள் படைத்த மெய்யான இந்துமதமேயாகும் என்றப் பேருண்மையும் விளக்கமாகின்றன.

எனவேதான் பதினெண்சித்தர்கள் "மதம்தான் அரசியலுக்கும், சமுதாயத்திற்கும், குடும்பவியலுக்கும், தனிமனித வாழ்வியலுக்கும், கலைகளுக்கும், தொழில்களுக்கும் தலைமை தாங்க வேண்டும், வழிநடத்த வேண்டும், வழியாக வேண்டும், வழித்துணையாக வேண்டும், வழிப்பயனாக வேண்டும்" என்று கூறுகிறார்கள். இன்றைய உலகியல் கறைகளுக்கும், குறைகளுக்கும், தேக்கங்களுக்கும், வீக்கங்களுக்கும்,


<u>நோய் நிலைகளுக்கும், பேய் நிலைகளுக்கும், தொல்லைகளுக்கும், துன்பங்களுக்கும் முடிவுகட்ட வேண்டுமென்றால் உலகந் தழுவி அனைத்து இடங்களிலும் மதமறுமலர்ச்சி ஏற்பட வேண்டும், மதமே ஆட்சி பீடத்தில் அமர வேண்டும், மதவாதிகளே அனைத்திலும் வழிநடத்தும் சத்திகளாக வேண்டும்</u>. இதனையே அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் கொள்கையாகவும், குறிக்கோளாகவும் அறிவித்துள்ளார்கள் பதினெண்சித்தர்கள்.

இங்குப் படத்தில் காட்டப்பட்டிருப்பது போல மிகத் தெளிவாக ஆவி, ஆன்மா, ஆருயிர் பற்றிய விளக்கம் வேறு யாராலும் தரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




## <u>ஆன்மா:</u>

**கட்டைவிரலில் முன்பாதி நீளஅகல அளவு ஒளியாக நீலநிறச் சுடராக இருக்கும்.**



**மிகப்பெரிய ஞானிகளின் ஆன்மா மட்டும் முழுக்கட்டை விரல் அளவுக்கு பொன்னிற மஞ்சள் வண்ணமாக விளக்கின் சுடர் போல் இருக்கும்.**



## உயிர்:

**அவரவர் கைப்பிடி அளவு நல்ல சிவப்பு வண்ண நெருப்புக்கனல் போல் சுடராக இருக்கும். மாங்காய் வடிவாக இருக்கும்.**

## ஆவி :

**மனித வடிவம் போல் முழுமையாக வெண்ணிறமாக இருக்கும். மனித உடலின் மேல் மெல்லிய வெண்மைத் துணியைப் போர்த்தியது போல் இருக்கும்.**

**************************

சித்தர்கள்தான், அதாவது இந்துமதம்தான் இம்மூன்றையும் பற்றி இவ்வளவு தெளிவாகக் கூறுகிறது. மேலும் முற்பிறப்புகள், மறுபிறப்புகள் இவற்றாலேயே விளக்கப்படுகின்றன. அதாவது மனித வாழ்வு பற்றிய முழுமையான விளக்கம் தருவது இந்துமதம் ஒன்றுதான்.

இந்துமதம் மிகப் பெரிய அறிவியல் விஞ்ஞானிகளான பதினெண் சித்தர்களால் படைக்கப்பட்ட ஒன்றாகும். இவர்கள் கண்ணால் காணக்கூடிய சாதாரணப் பொருள்களைப் பற்றிய ஆய்வில் அதிக ஈடுபாடு கொள்ளவில்லை. இவர்களுடைய ஆராய்ச்சி அனைத்துமே மனித உடலையும், சிந்தையையும், நெஞ்சத்தையும், வாழ்வியலையும் பற்றியவையேயாகும். இவர்கள், ‘<u>மனித வாழ்வு பழம்பிறப்பின் பயன்களாலும், மனிதன் பிறந்த நேரத்தில் இருந்திட்ட நாள், கோள், மீன் ..... முதலியவற்றில் இயக்க நிலைகளாலும், பாரம்பரிய</u>

<u>ஆற்றல்களாலும், ஆள்வினைகளாலும், சூழ்வினைகளாலும் அமைகின்றது'</u> என்ற பேருண்மையை அறிவியல் பூர்வமாகக் கண்டுபிடித்தார்கள். இவற்றின் வளர்ச்சியாக "<u>மனித வாழ்வை அருளுலகப் பயிற்சிகளாலும், முயற்சிகளாலும் எப்படி வேண்டுமானாலும் திருத்திச் செப்பனிட்டு அமைத்துக் கொள்ளலாம்</u>" என்ற அருள்ஞானத்தைக் கண்டறிந்தார்கள். அதாவது மதம் ஒரு விஞ்ஞானம் (Religion is a Science) என்று மிகத் தெளிவாகப் பகுத்தறிவுவாதிகளான பதினெண்சித்தர்கள் மெய்ப்பித்திட்டார்கள்.

பதினெண்சித்தர்களின் 1) கதை, 2) காதை, 3) கவிதை, 4) கீதை, 5) வாக்கு, 6) வாக்கியம், 7) வாசகம், 8) மறை, 9) முறை, 10) நெறி, 11) வேதம், 12) சித்தம், 13) நாதம், 14) போதம், 15) ஓதம், 16) சூத்திரம், 17) தோத்திரம், 18) சுருதி, 19) ஆரணம், 20) ஆகமம், 21) மீமாம்சை, 22) நேமம், 23) நியமம், 24) நிடதம், 25) நிட்டை, 26) கரந்தம், 27) குரு பாரம்பரியம், 28) அரச பாரம்பரியம், 29) இலக்கிய பாரம்பரியம், ... முதலிய நூல்களில் **<u>இந்துமதம் ஒரு விஞ்ஞானம்</u>** என்ற விளக்கம் நிறையக் கிடைக்கின்றது. இவற்றிலிருந்து (36) முப்பத்தாறு வாசகங்களை மட்டும் இங்கு எடுத்துக் கூறுகின்றோம். **இவற்றில் ஒரு வாசகமாவது இந்து மத மூலவர்களாகவும், காவலர்களாகவும் உள்ள தமிழர்களை மத உணர்வும், மத அறிவும், மத ஆற்றலும் பெறுவதற்கு முயலுமாறு செய்தால் போதும்.** ஏனெனில், <u>தமிழர்களின் விழிச்சியும், எழிச்சியும், செழிச்சியும், மலர்ச்சியும், வளவளர்ச்சியும்தான் இந்து மதத்தின் விழிச்சியும், எழிச்சியும், செழிச்சியும், மலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சிமீட்சியும் ஆகும்</u>.

1. **இந்து மதம் ஒரு ஞானம்.**
2. **இந்து மதம் ஓர் உலகாயுத ஞானம்.**

3. **இந்து மதம் ஒரு மானுடவியல் ஞானம்.**
4. **இந்து மதம் ஓர் அநுபவவியல் ஞானம்.**
5. **இந்து மதம் ஒரு தத்துவவியல் ஞானம்.**
6. **இந்து மதம் ஓர் ஓதியல் (நாதாந்த) ஞானம்.**
7. **இந்து மதம் ஒரு செயலியல் (சித்தாந்த) ஞானம்.**
8. **இந்து மதம் ஒரு போதியல் (போதாந்த) ஞானம்.**
9. **இந்து மதம் ஒரு நிடத** (நிட்டை = தவம்) **ஞானம். (துணை நிடத ஞானம், இணை நிடத ஞானம்).**
10. **இந்து மதம் ஒரு சூத்தர ஞானம்.** (**சூத்திர ஞானம், சூத்திற ஞானம்** - *இதைச் சூத்திரர்க்கு உரியது என்று தவறுகக் கருதக் கூடாது.*)
11. **இந்து மதம் ஓர் எந்தர ஞானம். (எந்திர ஞானம், எந்திற ஞானம், ஏந்தர ஞானம், ஏந்தரீக ஞானம்)**
12. **இந்து மதம் ஒரு மந்தர ஞானம். (மந்திர ஞானம், மந்திற ஞானம், மாந்தர ஞானம், மாந்தரீக ஞானம்)**
13. **இந்து மதம் ஒரு தந்தர ஞானம். (தந்திர ஞானம், தந்திற ஞானம், தாந்தர ஞானம், தாந்தரீக ஞானம்)**
14. **இந்து மதம் ஒரு சாத்தர ஞானம். (சாத்திர ஞானம், சாத்திற ஞானம்)**
15. **இந்து மதம் ஒரு தோத்தர ஞானம். (தோத்திர ஞானம், தோத்திற ஞானம்)**
16. **இந்து மதம் ஒரு வேள்வி ஞானம். (ஓம ஞானம், ஓக ஞானம், யாக ஞானம், யக்ஞ ஞானம்)**

17. இந்து மதம் ஒரு பத்தி ஞானம்.
18. இந்து மதம் ஒரு சத்தி ஞானம்.
19. இந்து மதம் ஒரு சித்தி ஞானம்.
20. இந்து மதம் ஒரு முத்தி ஞானம்.
21. இந்து மதம் ஒரு நான்மறை ஞானம்.
22. இந்து மதம் ஒரு நான்முறை ஞானம்.
23. இந்து மதம் ஒரு நானெறி ஞானம்.
24. இந்து மதம் ஒரு நான்வேத ஞானம்.
25. இந்து மதம் ஒரு யோக ஞானம். (யோகாந்த ஞானம்)
26. இந்து மதம் ஒரு போக ஞானம். (போகாந்த ஞானம்)
27. இந்து மதம் ஒரு மோக ஞானம். (மோகாந்த ஞானம்)
28. இந்து மதம் ஒரு பிண்ட ஞானம்.
29. இந்து மதம் ஓர் அண்ட ஞானம்.
30. இந்து மதம் ஓர் அண்டபேரண்ட ஞானம்.
31. இந்து மதம் ஓர் அன்பு ஞானம்.
32. இந்து மதம் ஓர் ஆன்ம ஞானம்.
33. இந்து மதம் ஓர் ஆவி ஞானம்.
34. இந்து மதம் ஓர் உயிர் ஞானம்.
35. இந்து மதம் ஓர் அரசியல் ஞானம்.
36. இந்து மதம் ஒரு சமுதாய ஞானம்.

# சிறப்புக் குறிப்பு

இன்றைய குவலய குருபீடம், ஞானாச்சாரியார், அருளாட்சி நாயகம், குருதேவர், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, இராசிவட்ட நிறைவுடையார், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரர் இந்துமதத் தந்தை அவர்களால் அருளாட்சி அமைப்புப் பணி துவக்கப் பட்டுள்ளது.

சித்தர் நெறியில் ஆர்வமும், விருப்பமும், ஈடுபாடும் உடையவர்களைச் சித்தர் நெறிச் செல்வர்களாக, சித்தர் நெறி ஏந்தாளர்களாக, சித்தரடியான்களாக, சித்தரடியாள்களாக, சித்தரடியார்களாக உருவாக்குவதற்கு மதுரை மாவட்டம் மேலூர்க் கொட்டாம்பட்டிக் காரியேந்தல்பட்டியில் குருகுலம் அமைக்கப் பட்டுள்ளது. சென்னைச் செங்குன்றத்தையடுத்த காரனோடையில் நாற்பத்தெட்டு வகை வழிபடுநிலையினர்களையும் மண்ணுலகத் தொடர்பு கொண்டு அனைத்து வகையான அருளாளர்களையும் உருவாக்குவதற்குரிய கருகுலம் அமைக்கப் (பதினெண்சித்தர் கோயில்) பட்டுள்ளது.

பதினெட்டு வகையான காடுகளில் உலகியல் தொடர்புடைய சுடுகாடு, புதைகாடு, இடுகாடு, நன்காடு, படுகாடு ... முதலியவைகளில் திரிசூலம் ஊன்றப்பட்டு மந்திரவாதிகளால் மக்களுக்கு விளையும் அனைத்து வகையான பாதிப்புக்களும் தடுக்கப்பட்டு வருகின்றன.

அமாவாசை வேள்வியும், முழுநிலவு நாளுக்குரிய பருவ பூசையும், மூன்றும் பிறைப் பூசையும் முறையாகச் செய்யப்படும் பயிற்சி நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இவற்றால் அனைத்து வகையான

வழிபாட்டு நிலையங்களும் புத்துயிர்ப்புச் செய்யப்படும் பணிகள் நடந்தேறுகின்றன.

அருளை அநுபவப் பொருளாக வழங்கக் கூடிய அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்கள் நாடெங்கும் பரவலாக அமைக்கப்பட்டு வாரத்தின் ஏழு நாட்களிலும் ஓமமோ! ஓகமோ! யாகமோ! யக்ஞமோ! வேள்வியோ! செய்யப்பட்டு நோயாளிகளுக்கும், பேயாளிகளுக்கும் நலமளிக்கும் பணிகள் விரிந்தும் விரைந்தும் நடந்தேறுகின்றன.

பொதுமக்களுக்கு மதத்துறையின் அவசியமும், இன்றியமையாமையும் உணர்த்தப் படுவதற்காகப் பொதுக்கூட்டங்கள், மாதமலர் வெளியீடு, எண்ணற்ற அறிக்கைகளும், அறிவிக்கைகளும், தனிநூல்களும் அச்சிடல் ..... முதலியன பரவலாக நிகழ்ந்தேறுகின்றன.

தரமும் திறமும் உரமும் வீரமும் உடையவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு அவரவர் தங்களின் ஆவி, ஆன்மா, ஆருயிர் மூன்றையும் உணர்ந்து மதவாழ்வு வாழச் செய்யும் பணிக்காக ஆயிரமாயிரம் சித்தரடியான்களும், சித்தரடியாள்களும், சித்தரடியார்களும் இரவு பகலாகச் செயல்பட ஆரம்பித்து விட்டார்கள். எனவே, அகஇருளையும் புறஇருளையும் அகற்றிடும் பணியில் ஈடுபட விரும்புகிறவர்கள் எங்களோடு தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

**இந்து மறுமலர்ச்சி இயக்கம்**
**நிறுவன நிர்வாகக் குழு.**

1. இ.ம.இ. தலைமைப் பொறுப்பாளர், அருள்மிகு அங்காள பரமேசுவரி சன்னிதானம்.

2. அ.வி.தி. தலைமைச் செயலாளர், அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம்.

3. அ.வி.தி வளர்ச்சிப் பணியாளர், அருள்மிகு ஆலவாய் மதுரை மாமூதூர்த் தத்தனேரி சுடலைப் பத்திரகாளி சன்னிதானம்.

4. அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம்.

5. அருள்மிகு திரிபுரமெரித்த அவிர்சடைக் கடவுள் சன்னிதானம்.

6. அருள்மிகு பழனியாண்டவர் சன்னிதானம்.

7. அருள்மிகு ஓமாந்தூர் மாசி பெரியண்ணசாமி சன்னிதானம்.

8. அருள்மிகு அகத்தியர் சன்னிதானம்.

9. அருள்மிகு புன்னைநல்லூர் மாரியம்மன் சன்னிதானம்.

**அன்பளிப்பு**

அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம்.

**"கடவுள்களே மனிதர்களாக வருகிறார்கள்."**

**"மனிதர்களே கடவுள்களாக ஆகிறார்கள்."**

**"கடவுள் மனிதர்களின் முதலாளியோ, முடியரசனோ அல்ல."**

**"கடவுள் மனிதனின் தொண்டனாகத்தான் அருள்புரிவான்."**

**- ஆதாரம்: நிடதம், துணைநிடதம், இணைநிடதம், கருவாக்கு, கருவாசகம், சூத்திறம், சூத்திரம், சூத்தரம் ... என்ற நூல்கள்.**

# TEN COMMANDMENTS OF INDUISM

# இந்துமதத்தின் பத்துக் கட்டளைகள்

1. உலக அருளாளர்களே ஒன்று திரளுங்கள்! ஒற்றுமைப் படுங்கள்! ஒருமைப்பாட்டுடன் செயல்படுங்கள்!

2. உலக மதத் தலைவர்களே ஒன்று திரளுங்கள்! ஒற்றுமைப் படுங்கள்! ஒருமைப்பாட்டுடன் செயல்படுங்கள்!

3. உலக மதவாதிகளே ஒன்று திரளுங்கள்! ஒற்றுமைப் படுங்கள்! ஒருமைப்பாட்டுடன் செயல்படுங்கள்!

4. உலகப் பத்தர்களே! மெய்யன்பர்களே! ஆத்திகர்களே! மத வரலாறுகளையும் இலக்கியங்களையும் படித்துப் போற்றுங்கள்!

5. உலகப் பூசாறிகளே! அவரவர் மதப் பூசைமொழிகளை நன்கு பயின்று ஓதி அருளூற்றுக்களாகத் தயாராகுங்கள்!

6. உலகச் சமயவாதிகளே! வழிபாட்டு நிலையங்களைத் தூய்மையும் வாய்மையும் அருளும் நிறைந்தவைகளாக ஆக்குங்கள்.

7. உலக மதவாதிகளின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் மதப் போலிகளையும், காலிகளையும், துரோகிகளையும், விரோதிகளையும் திருந்தச் செய்யும்.

8. உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்கினுல்தான் மதத் துறை மற்ற துறைகளுக்கு தலைமை தாங்கி வழிகாட்டியாகவும், வழித்துணையாகவும் செயல்பட முடியும்.

9. உலக மத மறுமலர்ச்சிப் பணியே உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை உருவாக்கும்.

10. உலக மத விழிச்சியும், எழிச்சியும், செழிச்சியுமே சர்வாதிகாரங்களையும், ஆதிக்க வெறிகளையும் முடிவுறச் செய்து விடுதலை வாழ்வை உரிமையும், பெருமையும் பெறச் செய்திடும்.

## இந்து மறுமலர்ச்சி இயக்கமும் அதன் மற்ற கிளை அமைப்புக்களும்.



மெய்ஞ்ஞானக் கொடி

**//உண்மை நகல்//**

**//இதுவரை உள்ள அனைத்தும் 1985இல் அச்சிட்டு வெளியிடப்பட்ட 'ஆவி, ஆன்மா, ஆருயிர் விளக்கம்' என்ற அறிவிக்கையில் உள்ளவை.//**

//1982இல் அச்சிட்டு வெளியிடப்பட்ட அறிவிக்கையின் சில பக்கங்கள் கீழே வழங்கப்படுகின்றன. இந்த அறிவிக்கை சேலம் வேம்படிதாளம் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட புதிய அருட்கோட்டத்திற்காக அச்சிடப் பட்டது. இந்த அறிவிக்கையில் உள்ள பெயர்கள், முகவரிகள் மட்டும் இங்கே தரப்படவில்லை.//

# அருளுலக அறிவிப்பு

# அருவுருவ மூகாம்பிகை ஆலயம்

## ஆதிசங்கராச்சாரியார் முச்சத்திபீடக் கோட்டம்

# இந்து மறுமலர்ச்சி இயக்க அருட்பணி

மானுடநல உரிமைப் பாதுகாப்புக்காக

**தேவி மூகாம்பிகை யாகச் சுடராக அருள் வழங்குகிறாள்.**

சேலம் மாவட்ட வேம்படிதாளம் கிராமத்தில்

**ஓமம், ஓகம், யாகம், யக்ஞம், வேள்வி** எனும்

**“ஐந்தீ வேட்டல்”** பூசையும்;

**கொடிநிலை, கந்தழி, வள்ளி** எனும்

**“முத்தீ ஓம்பல்”** பூசையும்

தொடர்ந்து நிகழுகின்றன. பத்தர்கள் பயன்பெற

அழைக்கப் படுகிறார்கள்.

**அருளார்ந்த அறிவிப்பு.**

**திருவுள ஒப்புதல் பெற்ற குருவாணையாகிறது.**

**ஞாலகுரு, ஞானகுரு,**

**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,**

**குருமகாசன்னிதானம் சித்தர் கருவூறார்.**

**இந்து மறுமலர்ச்சி இயக்கப் பாரம்பரியத் தலைவர்.**

# மத விழிச்சி எழுச்சி செழுச்சி அழைப்பு

அறியாமையும் வெறியும் ஆன்மாக்களைத் தொல்லைப்படுத்துவது முடிவு கட்டப்படுகிறது!

பேய்களும் மந்திரவாதிகளும் ஆவிகளைத் தொல்லைப்படுத்துவது முடிவு கட்டப்படுகிறது!

நோய்களும் கோள்களும் உயிர்களைத் தொல்லைப்படுத்துவது முடிவு கட்டப்படுகிறது!

சித்தர் நெறிச் செல்வர்களால் 'அருள்' ஊற்றெடுத்து ஆற்றுப் பெருக்காய் ஓடுகிறது. இதன் மூலம் தாகங்கள், பசிகள், வேட்கைகள் தணிக்கப்படுகின்றன!

அருளாளர்களும், அருள் வழங்கு நிலையங்களும் உருவாக்கப் படுகின்றனர். இவர்கள் மூலம் தெரியாமை, புரியாமை, அறியாமை, இயலாமை முதலியவை நீக்கப்படுகின்றன.

அருட்பணி விரிவாக்கத் திட்டத்தால் எங்கும் அருளொளி பரவுகிறது. இதன் மூலம் பொருளுலக இருளெல்லாம் நீக்கப்படுகின்றது.

சித்தர் நெறி நின்று பத்தி, சத்தி, சித்தி, முத்தி பெற்றுப் பிறப்பிறப்பிலிருந்து 'வீடுபேறு' வழங்கப்படுகிறது.

வாரீர்! வாரீர்! வாரீர்! வாரீர்!

ஆதிசங்கரர் அருள் பெறுவீர்!

தேவி மூகாம்பிகை அருள் பெறுவீர்!

# வெட்டவெளிக் கருவறை கொண்டருளு அருவுருவ தேவி மூகாம்பிகை அருள் வேட்டல் மாலை

நாநிலத்தீர் வாரீர்! போகாப் புனலில் நீராடுவீர்!
அடங்காப் பசிகளை வேகாத் தழையால் தணிப்பீர்!
அறிவு அடங்கச் சாகாக் கல்வி கற்பீர்!
உணர்வு உய்யத் தூய வாய்மை துய்ப்பீர்!
தேய்வும் தொய்வும் மாயத் தேவியைக் காண்பீர்!

யாகச்சுடர் நின்று மனமுவந்து கூவுகிறோம்
ஆய்வு செய்வீர் ஆக்கம் பெறுவீர்
மாஞால ஞான மெல்லாம் பெற்றிடுவீர்
சித்த கணமாகிடச் சித்தம் பெறுவீர்
மெத்த வித்தகம் பேசிப் பித்தாகிடாதீர்
பத்தோடு இரண்டு சேர்த்துப் பார்த்திடுவீர்
பத்துக்கள் நீக்கிப் பயன் பெற்றிடுவீர்
பத்தியால் சத்தியாகிச் சிவமாகி முத்தியாவீர்
வேதாகம நிடதப் போதை நீங்குவீர்
சாத்திற தோத்திறப் பாதை கடப்பீர்
மந்திற தந்திற வாதை அகற்றுவீர்
எந்திற சக்கர ஓதை ஒழிப்பீர்
திருவும் குருவும் ஒன்றென உணர்வீர்
மறை முறை நெறி கற்றிடுவீர்
வேதம் நாதம் போதம் பயின்றிடுவீர்
சித்தம் பூசை ஞானம் ஆற்றிடுவீர்

ஓமயோக யாகயக்ஞ வேள்விகள் செய்திடுவீர்
கொடிநிலை கந்தழி வள்ளி ஓம்பிடுவீர்
தேடியே அருட்கலை ஆயகலை வேட்டிடுவீர்
நாடியே பதின்மூன்று நிலைகளை உற்றிடுவீர்
கூடியே நாற்பத்தெட்டு நிலைகளை அடைந்திடுவீர்
உய்வு வழங்கு வாய்மைகளைத் துய்ப்பீர்
உண்மையிது நன்மையிது பயனுறுவீர் வாரீர்
என்னை யறிந்து தன்னை யறிவீர்
தன்னை யறிந்து தலைவனை யறிவீர்
வினைகள் அகன்று கல்பநிலைகள் எய்துவீர்

வாரீர்! வாரீர்! வாரீர்! வாரீர்!

வண்டமிழால் வையம் வளமுறச் செய்வோம்
தொண்டால் மானுடம் புனிதமுறச் செய்வோம்
பண்டைய செழிப்புகளை மீண்டும் விளைவிப்போம்
கண்டதை விண்டு அருளாய் வழங்குவோம்
விண்டதைக் கண்டிட வழிகள் அறிவிப்போம்
வேண்டியதைப் பெற்றிட அனைவருக்கும் துணையாவோம்
நாநிலத்தீர் நன்மைமிகு தருணமிது கூவுகிறோம்
சித்தரடியான்கள் அடியாள்கள் அடியார்கள் அருளுகிறார்கள்

வாரீர்! வாரீர்! வாரீர்! வாரீர்!

**தேவகுரு வேதகுரு நாதகுரு போதகுரு**
**சுரகுரு அசுரகுரு இருடிகுரு அமரகுரு குருதேவர்**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**குருமகா சன்னிதானம் சித்தர் கருவூரார்.**

# அருட்கலைகளைப் பயன்படுத்துங்கள்

# இந்து மறுமலர்ச்சி இயக்கம்

**[தோற்றம் கி.பி. 1772]**

**<u>தோற்றுவித்தவர்:</u> சித்தர் கருவூரார் வழிவந்த சித்தர் ஏளனம்பட்டியார்**

**ஞாலகுரு, ஞானகுரு**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**குருமகாசன்னிதானம் சித்தர் கருவூரார்**
**இந்து மறுமலர்ச்சி இயக்கப் பாரம்பரியத் தலைவர்**

**“சமுதாய மாற்றமே அனைத்து ஏமாற்றங்களையும் அகற்றும்.”**

**“இத்திருநாட்டில் மதப் புரட்சியே சமுதாயப் புரட்சி! - அதுவே தனிநபர் விழிச்சி! அரசியல் எழுச்சி! மொழிச் செழுச்சி!”**

**- சித்தர் கருவூரார்.**

நிலையிலா மானுட வாழ்வு, நிலையிலாப் பொருள்களுக்கு மலையளவு முயற்சிகளைச் செய்து அலைகடல் துரும்பென அலைவதாகவே அமைகிறது. ஒவ்வொரு மானுடரும் என்றுவது ஒரு நாள், ஒரு நொடிப் பொழுதாவது தாம் யார்? தமது இப்பிறப்புக்கு முந்திய நிலைகள் என்ன? தாம் வாழப் போகும் காலம் ‘ஆயுள்’ எவ்வளவு? தமது இறப்புக்குப் பிந்திய நிலை என்ன? தாம் உருவாக்கும் உறவுகளும், உரிமைகளும், செல்வங்களும் எப்படியெப்படிப் பயன்படுத்தப்படல் வேண்டும்? தாம் பெற்றுள்ள அறிவு நலம், உடல் நலம், பொருள் நலம், புகழ் நலம், நட்பு நலம், தொழில் நலம், விருப்பாற்றல் நலம், செயலாற்றல் நலம், துய்ப்பாற்றல்

நலம் முதலியன எத்தரத்தன? இவை செம்மைப்பட, மேம்பாடடைதற்குரிய முறைகள் எவை? என்று ஆழ நினைத்து, நீள முயன்று அருட்கலைகளைத் தேடிக் கற்றுப் பயன்படுத்துதல் வேண்டும்.

**பூசை, தவம், யோகம், ஞானம், பத்தி ; ஓகம், ஓமம், யாகம், யக்ஞம், வேள்வி** எனும் **‘ஐந்தீ வேட்டல்’ ; கதிரவன், திங்கள், விண்மீன்** எனும் **‘முத்தீ ஓம்பல்’** ; **குருவை துணைக் கோடல், ஆலய வழிபாடு, ஐந்தரம்** (பெயரியல், எண்ணியல், அங்கவியல், மனையியல், வரியியல்), **தொடுகுறி, கனு சாத்திரம், சரம், நாடி, ஏடு, விரிச்சி, உடுக்கை, முத்துக்குறி, வெறியாட்டு, உண்டாட்டு, குறவை, புட்குறி, பல்லிசொல், நிமித்திகம், அருள், மருள், ஞானக்காட்சி** எனும் பல்வேறு தெய்வீகக் கலைகளிலும், அருட் கலைகளிலும் பயிற்சியும், தேர்ச்சியும் பெற்று இவ்வுலக வாழ்வின் இணையிலா இன்பத்தை முழுமையுடன் நுகர முற்படுங்கள்.

ஓம் திருச்சிற்றம்பலம்!

**//உண்மை நகல்//**

//1982இல் அச்சிட்டு வெளியிடப்பட்ட ‘அருளுலக அறிவிப்பு - அருவுருவ மூகாம்பிகை ஆலயம்’ என்ற தலைப்பிடப்பட்ட அறிவிக்கையே இது. இந்த அறிவிக்கையில் இருந்திட்ட முகவரிகள் தற்போது முப்பது ஆண்டுகள் கடந்த நிலையில் செயலில் இல்லை என்பதால் இத்துடன் தரப்படவில்லை.//

**<u>கி.பி.1040-ல் தாத்தா தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் தஞ்சைப் பெரிய கோயில் நிலவறைக்குள் செல்லும் போது அருளிய குருபாரம்பரிய வாசக வரிகளில் சில...</u>**

**“...... என்றாவது ஒருநாள், எவராவது தமிழரைக் காப்பாற்ற நினைத்தால்; அவர்களை ஒற்றுமைப்படுத்தியே செயலில் இறங்க வேண்டும். அதற்குத் தமிழ்மொழியே வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக, வழியின் எல்லையாக இருக்கும். அமிழ்தினும் இனிய தமிழ்மொழியைப் பெற்றும் தமிழர்கள் அகத்தாலும் உயர்வடைய முடியவில்லை, புறத்தாலும் உய்வடைய முடியவில்லை. இவர்கள் மதஞானம் பிறந்த தமிழ்மொழியை மறந்தும், துறந்தும், புறக்கணித்தும் மாற்றுமொழிகளில் மதஞானத்தைத் தேடித் தோற்று வேற்றார்க்கு அடிமையாகி வேட்டை கிடைக்காத வேடன் போல் திரும்பிப் புலம்பி, அலமந்து, நைந்து, சிதைந்து ..... மாளுகிறார்கள். எனவே, இவர்களை ஆளுபவர்கள், அன்னியர்களாகவே இருக்கும் அவலம் அடிக்கடி ஏற்படுகிறது. எப்படியும் இவர்களைக் காப்பதற்கே நூல்களைத் தொகுத்தும், தொகுப்பித்தும், எழுதியும், எழுதுவித்தும் செயல்படும் எமது முயற்சிகளைக் கோடிட்டுக் காட்டுவதே தமிழரைக் காக்கத் தயாரிக்கும் படையின் பாடிவீடு .....”**

**- குருபாரம்பரிய வாசகம்.**

<u>அருளியவர்</u> : **கருவூரார்.**

<u>ஏட்டில் வரைந்தவர்</u> : **கருவூர்த் தேவர்.**

**//உண்மை நகல்//**

**//1982இல் வெளியாகிய ‘அருளாட்சி அழைப்பு அறிவிப்பு’ என்ற அறிவிக்கையில் இருந்த குருபாரம்பரிய வாசகம் இது.//**



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** இந்துமதத் தந்தையாகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார். **இவர் ஒன்பது பிற்காலச் சோழர் குல மன்னர்களுக்குக் குலகுருவாகவும், அரசரில்லாக் காலங்களில் அரியாசனத்தில் அமர்ந்து அரசோச்சும் ஆட்சித் தலைவராகவும் வாழ்ந்திட்டார். தஞ்சைப் பெரிய கோயிலிலும், நாட்டின் பல பகுதிகளிலும் ‘சிறுபள்ளி’, ‘பெரும்பள்ளி’ என்ற கல்விக் கூடங்களை நடத்திப் பல கலைகளையும் முறையாக வளர்த்திட்டார்.**

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd:933/2017) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org** **www.gurudevar.org**
**www.induism.org** ***Email:*** **indhuism@gmail.com**
www.books.gurudevar.org